**செ. கு. எண்: 157** **நாள்: 04.09.2018**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின்

## "ஆசிரியர் தின" வாழ்த்துச் செய்தி

ஆசிரியராக பணியை தொடங்கி, தமது கடின உழைப்பினாலும், நற்சிந்தனையாலும் இந்திய குடியரசுத் தலைவராக உயர்ந்து, நமது தாயகத்தின் சிறப்பைத் தரணிக்கு உணர்த்திய தத்துவமேதை டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 5–ஆம் நாளை ஆசிரியர் தினமாக கொண்டாடும் ஆசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், இந்நன்நாளில் நல்லாசிரியர் விருது பெறும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்னும் மகாகவி பாரதியாரின் கூற்றை மெய்பிக்கும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாணவ மாணவியரும் கல்வியில் சிறந்து விளங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கட்டணமில்லா கல்வி, விலையில்லா பேருந்து பயண அட்டைகள், மிதி வண்டிகள், சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள், கல்வி உபகரணப் பொருட்கள், இடைநிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகை வழங்குதல், சிறந்த கல்வியை மாணவர்கள் தங்குதடையின்றி பெற்றிடும் வகையில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல், தரமான கல்வியை தமிழ்நாட்டு மாணவர்கள் பெற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கில், புதிய பாடத்திட்டங்கள் வடிவமைத்தல், மாணவர்களும் அவர்தம் பெற்றோர்களும் தங்களுடைய ஐயங்களை போக்கிடும் வகையில் கட்டணமில்லா உதவி மையம் அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மாணவச் செல்வங்களுக்கு நல்ல குறிக்கோள்களையும், சமுதாய உணர்வுகளையும் விதைத்து, அவர்களின் அறிவுக்கண்ணை திறக்கும் மகத்தான பணியினை ஆற்றிவரும் நல்லாசிரியர்களுக்கு "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது", சிறந்த முறையில் கணினியை பயன்படுத்தி மாணவர்களுக்கு பயிற்றுவித்தல், கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்குதல், குழந்தைகள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு "கனவு ஆசிரியர்" போன்ற சிறப்புமிக்க விருதுகளை ஆசிரியப் பெருமக்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கி கௌரவித்து வருகிறது.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்கிடும் கல்வியை இளம் தலைமுறையினருக்கு கற்பித்து, அறிவுசார் சமுதாயத்தை உருவாக்கிடும் ஆசிரியப் பெருமக்களின் சேவை மென்மேலும் சிறக்க வேண்டுமென வாழ்த்தி, அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது ஆசிரியர் தின நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஆசிரியர் பணி சிறக்கட்டும்! அறிவோங்கித் தமிழ்நாடு உயரட்டும்!

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**